**PEPERIKSAAN PERCUBAAN SPM 2018** **6354/2**
**எசு.பி.எம் முன்னோட்டத் தேர்வு**

**BAHASA TAMIL**
**தமிழ்மொழி**

**Kertas 2**
**தாள் 2**
**2 ¼ jam** **Dua jam lima belas minit**

---

**JANGAN BUKA KERTAS SOALAN INI SEHINGGA DIBERITAHU**

1. *Kertas soalan ini mengandungi* ***22*** *soalan.*

2. *Jawab* **semua** *soalan.*

3. *Jawapan anda hendaklah ditulis di dalam buku jawapan yang disediakan. Sekiranya buku jawapan tidak cukup, sila dapatkan helaian tambahan daripada pengawas peperiksaan.*

---

Kertas soalan ini mengandungi 14 halaman bercetak.

**பிரிவு அ : கருத்துணர்தல் (பல்வகை)**
[30 புள்ளி]

கீழ்க்காணும் **கருத்துப்படத்தைக்** கூர்ந்து கவனித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுதுக.




1 இப்படம் உணர்த்தும் **கருத்து** யாது? [2 புள்ளி]

கீழ்க்காணும் **செய்தியை** வாசித்துத் தொடர்ந்து வரும் வினாவுக்கு விடை எழுதுக.

**தமிழ் இலக்கியப் பாடத்தை எடுக்க மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்**



பாரிட் புந்தார், அக். 28
தமிழ் இலக்கியப் பாடம் கடுமையான பாடமல்ல. மலேசியக் கல்வி சான்றிதழ் (எசு.பி.எம்) தேர்வில் தமிழ்மொழியைத் தங்கள் தேர்வுப் பாடமாகத் தேர்வு



செய்யும் ஒவ்வொரு மாணவரும் தமிழ் இலக்கியப் பாடத்தையும் கண்டிப்பாகத் தேர்வு செய்ய வேண்டும் என்று தமிழ் வாழ்வியல் இயக்கச் செயலாளர் சுப. சற்குணன் வேண்டுகோள் விடுத்தார். தமிழ் வாழ்வியல் இயக்க ஏற்பாட்டில் தமிழியல் நடுவத்தில் நடைப்பெற்ற எசு.பி.எம் மாணவர்களுக்கான தமிழ் இலக்கியப் பாட கருத்தரங்கு நிகழ்ச்சியில் பேசிய அவர் மேற்கண்ட கருத்தை வலியுறுத்தினார்

2 சுப.சற்குணன் **ஏன்** தமிழ் இலக்கியப் பாடத்தை மாணவர்கள் தேர்வுப் பாடமாக எடுக்க வேண்டுமென வலியுறுத்துகின்றார்?

[2 புள்ளி]

3 முனைவர் முரசு நெடுமாறனின் சிறப்புகளுள் **இரண்டனை** எழுதுக. [2 புள்ளி]



முனைவர் முரசு. நெடுமாறன் அவர்கள் மலேசியாவிலுள்ள தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவராவார். இவர் ஓய்வு பெற்ற ஆசிரியரும், பல்கலைக்கழகக் பகுதிநேர விரிவுரையாளருமாவார்.

1950 தொடக்கம் முதல் இவர் மலேசியத் தமிழ் இலக்கியத் துறையில் ஈடுபட்டு வருகின்றார். வகுப்பறைகள், மேடைகள் மட்டுமல்லாது வானொலியில் கல்வி ஒலிபரப்பில் இவரது பாடல்கள் பரவலாக இடம்பெற்றுள்ளன. இவற்றை ஒலிப்பேழைகளில் பதிவு செய்தும் பரப்பி வருகிறார்.

இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்குப் பல ஆண்டுகளாக இலவசமாகத் தமிழ்ப்பாடம் போதித்து வந்துள்ளார். ஆண்டுதோறும் மாணவர்களைக் கொண்டு மாணவர் பண்பாட்டு விழாக்கள் நடத்தியுள்ளார். முனைவர் முரசு நெடுமாறன் அவர்கள் குழந்தை இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு இத்துறையில் குழந்தைகளுக்கான நூல்களையும் குறுந்தட்டுகளையும் உருவாக்கி வருகின்றார்.

4 கீழ்க்காணும் உரைவீச்சு உணர்த்தும் **கருத்து** யாது?




[2 புள்ளி]

5 கீழ்க்காணும் நகைச்சுவைத் துணுக்கில் **மாணவனின் கூற்று** எதை உணர்த்துகிறது?

| | |
|---|---|
| ஆசிரியர்: | நாய் பற்றிய கட்டுரை எழுதி வரச் சொன்னால்,நீயும் உன் அண்ணனும் ஒரே மாதிரி எழுதி வந்திருக்கிறீர்களே? |
| மாணவன்: | எங்கள் வீட்டில் ஒரு நாய் தான் இருக்கிறது ஐயா. |



[2 புள்ளி]

*[Lihat halaman sebelah*

6 கீழ்க்காணும் பகுதியின்வழி திருநாவுக்கரசர் தமிழுக்கு ஆற்றிய **தொண்டினை** எழுதுக.




அப்பர் (திருநாவுக்கரசர் நாயனார்) கி.பி ஏழாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில், தமிழ் நாட்டில் பக்தி இயக்கத்தை வளர்த்த சிவனடியார்களுள் ஒருவரும், 63 நாயன்மார்களுள் ஒருவரும் ஆவார். திருநாவுக்கரசர் தமிழுக்கு ஆற்றிய தொண்டை நாம் மறந்துவிட முடியாது. திருநாவுக்கரசரின் தேவாரப் பாடல்களைப் பக்தி இலக்கியமாக மட்டுமே பார்க்காமல் தமிழ் இலக்கியமாகவும் பார்க்கின்ற நிலைக்குத் தமிழர்கள் உயர வேண்டும். 'சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசைப் பாடல் மறந்தறியேன்' என்று தமிழுக்கு மகுடம் சூட்டியவர்களுள் திருநாவுக்கரசரும் ஒருவர் என்பதை யாரும் மறுத்துவிட முடியுமா? திருநாவுக்கரசர் தாண்டகம் என்ற செய்யுள் வகையில் சிறந்த பாடல்களை இயற்றியதால் 'தாண்டக வேந்தர்' என அழைக்கப்பட்டார். இறைவனுக்குத் தொண்டாற்றுவதையே தம் கடமையாகக் கொண்ட திருநாவுக்கரசர் 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்றே வாழ்ந்து இறைவன் திருவடிப் பேற்றைப் பெற்றவராவார்.

[2 புள்ளி]

**கேள்விகள் 7 முதல் 10 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து, தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

‘மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா’ என்று அன்றே கவிமணி கூறிச் சென்றுள்ளார். மங்கையர்கள் வீட்டின் நிர்வாகிகள், நிதியமைச்சர்கள், சமையலறை வல்லுநர்கள் மற்றும் அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல பொறுமையின் சிகரங்கள் என்றெல்லாம் பெண்களைப் புகழுரைப் பேசியது சமூகம். ஆனால், அதே சமூகம் பெண்கள் புயலெனப் புறப்பட்டபோதெல்லாம், தடை விதித்து, சீறி வந்த புயலைச் செயலிழக்கச் செய்து, அப்பெண்களின் சிந்தையை மந்தமாக்கியது.

விடுதலை என்றால் என்ன? ‘பிறருக்குத் தீங்கில்லாமல் அவனவன் தன் விருப்பத்திற்கேற்ப செய்யலாம் என்பதே விடுதலை’ என்று விளக்கமளிக்கிறார் ஹெர்பர்ட் ஸ்பென்சர். இத்தகைய விடுதலை பெண்களுக்கு உண்டா என்பது இன்றுவரை ஒரு கேள்விக் குறியாகவே உள்ளது. சிலர், ‘’பெண்களைத் தனியாகச் சஞ்சரிக்க விட்டால், அண்டங்கள் இடிந்து போகும்; மனிதர்கள் எல்லாம் மிருகம்போல் நடந்துகொள்வர்” என்று பெண் விடுதலைக்கு எதிராகக் குரல் கொடுத்தனர். இதற்குப் பதிலளிக்கும் வண்ணம், மேனாட்டு இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்த பாரதி, ‘’ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பெண்கள் விருப்பப்படி எங்கு வேண்டுமானாலும் போகலாமென்ற சுதந்திரம் உண்டு. அதனால் பூகம்பமொன்றும் நேர்ந்துவிடவில்லையே?’’ என்று கேட்டு, பெண்களுக்குச் சுதந்திரம் தேவை என்பதை வலியுறுத்துகிறார். இதனையே

‘ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.’

என்று தன் பாடல்வழி வெளிப்படுத்துகின்றார் பாரதியார்.

அன்று அரசனுக்கு ஆலோசனைகள் வழங்கியவள் பெண் என்பதற்கு, ஔவையார் அதியமானுக்காகத் தூது சென்றதும் அரசியலில் ஈடுபட்டதும் சான்றுகளாக உள்ளன. மேலும், நாட்டைக் காக்க, வீரக் குழந்தைகளை ஈன்றெடுத்த பெண்களும் சங்க காலத்தில் இருந்தனர். இவ்வாறாக உடல் வலிமையும் மன வலிமையும் கொண்ட பெண்களை மலர்களுக்கும் கொடிகளுக்கும் ஒப்பிடுவர். ஆனால், மெல்லிய எளிதில் வாடி அழியும் தன்மை கொண்ட மலர்களையும் கொடிகளையுமே பெண்மையின் உதாரணங்களாகக் காட்டுதல் சரியாகுமா? ஐயிரண்டு திங்களாய் தன் வயிற்றில் கருவின் உருவினைச் சுமக்கும் மங்கையருக்கு, இச்சமூக முன்னேற்றத்திற்காகச் சமுதாய வலிகளையும் சுமக்க வலுவுண்டு என்பதைச் சமுதாயம் உணர வேண்டும்.

இதனை எடுத்துரைக்க பாரதி, கவிமணி என்று எத்தனையோ கவிகளும், கற்றறிந்த வல்லுநர்களும் தேவைப்பட்டனர். ஆனால், உண்மையில் சமுதாயத்தில் இன்னமும் பெண்களின் வாழ்வில் விடியல் தோன்றவில்லை. ஒரு புறத்தில் பெண்கள் விஞ்ஞானிகள், நீதிபதிகள், காவல்துறை உயர் அதிகாரிகள், விண்வெளி வீராங்கனைகள், நாட்டு முதல்வர்கள், பிரதமர்கள் என்று குன்றுபோல் உயர்ந்து நிற்க, மறுபுறம் கள்ளிப்பால் கொடுத்துப் பெண் குழந்தைகளைக் கொல்லும் அவச்செயல்கள் எங்கோ ஒரு மூலையில் இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் வருகிறது. மேலும், வேலையிடங்களில்

*[Lihat halaman sebelah*

பெண்களுக்குத் தொல்லைகள், குறிப்பாக, பாலியல் தொல்லைகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

இருப்பினும், இன்றைய கால கட்டத்தில் பெண்களின் வாழ்வில் சில மாற்றங்கள் நடப்பதை நாம் கண்கூடாகக் காணும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்று பெண்களுக்குக் காதல் உரிமைகள் ஓரளவு தரப்பட்டுள்ளது. 'கணவனை இழந்தவற்குக் காட்டுவது இல்" என்பதற்கேற்ப, கணவனை இழந்த பெண், தன் உயிரை மாய்த்துக் கொள்ளும் நிலை அன்றிருந்தது. ஆனால், இப்போது மனித நேயத்திற்குப் புறம்பான இக்கொள்கை மாறி, பெண்கள் கணவனை இழந்த பின்னும், தொடர்ந்து உயிர் வாழும் நிலையை நாம் கண்டு மகிழ்கிறோம். பாலிய திருமணமும் இன்று அருகிவிட்டது. மணவிலக்கு அல்லது விவாகரத்து இயல்பாகி, சட்டப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவ்வாறு, சட்டப்படி மணவிலக்கு பெற்ற பெண்கள், மறுமணம் செய்வதும் இன்று தமிழ்ப் பெண்களிடையே மெல்ல அறிமுகம் ஆகி வருகிறது. இவை ஓரளவு பெண்களுக்கு வழங்கப்பட்ட சுதந்திரம் என்றே கொள்ள வேண்டும்.

பெண்ணை, பழமையெனும் துருப்பிடித்த இரும்புப் பெட்டியினுள் அடைத்து வைத்து, பரண் மீது போட்டு, ‘சமுதாயக் குறை’ எனும் தூசுபடிய விட்டு விடாதீர்கள். அவர்களின் உரிமைகளைப் பறிக்காமல் அவர்களைப் புறாக்களைப் போல் சுதந்திர வானில் பறக்க விடுங்கள். ஏனெனில், அப்போதுதான் பாரதி கூறியதுபோல அவர்களால் சட்டமியற்றவும் முடியும்; பட்டங்கள் பெறவும் முடியும்.

ஓர் ஆணின் வளர்ச்சிக்குப் பின்னால், ஒரு பெண் இருப்பாள் என்று கூறுவதுண்டு. அதுபோல ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சிக்கும் பெண்கள் காரணமாயிருக்க வேண்டும். தொட்டிலை ஆட்டும் கை, உலகையே ஆட்டிப் படைக்கும் வல்லமை கொண்டது. இத்தகைய மாசக்தி கொண்ட பெண்மை, ‘இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?’ என இச்சமுதாயத்திற்குச் சவால் விட்டு, பல சாத்திரங்களை முறியடித்து முதலிடத்தை **எட்டிப்பிடிக்க** என்றும் முயல வேண்டும்.

[சரவணன் இராமச்சந்திரன் – முகநூல் சிந்தனை
[சில மாற்றங்களுடன்]

7 சமூகத்தில் பெண்கள் எவ்வாறெல்லாம் புகழப்பட்டனர்? [2 புள்ளி]

8 (i) பெண்களுக்குச் சுதந்திரம் தர வேண்டும் என்ற எண்ணம் பாரதியாருக்குத் தோன்ற வித்திட்டது எது என நீ கருதுகிறாய்? [2 புள்ளி]

(ii) பெண்கள் வாழ்வில் உயர சமூகம் ஆற்ற வேண்டிய **இரண்டு** கடமைகள் யாவை? [2 புள்ளி]

9 வாக்கியத்தில் கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்கு ஏற்ற பொருள் எழுதுக.
பல சாத்திரங்களை முறியடித்து முதலிடத்தை **எட்டிப்பிடிக்க** என்றும் முயல வேண்டும். [2 புள்ளி]

10 பெண்களுக்குச் சுதந்திரம் தரப்படாவிட்டால், அவர்கள் எதிர்நோக்கும் **ஐந்து சிக்கல்களை** 50 சொற்களில் எழுதுக.

[10 புள்ளி]

**பிரிவு ஆ: கருத்துணர்தல் (படைப்பிலக்கியம்)**
[30 புள்ளி]

**கேள்விகள் 11 முதல் 14 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

என் அலுவலக அறைக் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டு நான் நிமிர்ந்து பார்த்தேன். ஆங்கில ஆசிரியர் கணேசன் நின்று கொண்டிருந்தார்.

“என்ன விஷயம் கணேசன்?” என்று கேட்டேன்.

“ஒன்றும் இல்லை ஐயா. நம்ம புதிய ஆசிரியரைப் பற்றி ஒரு விஷயம் சொல்லிவிட்டுப் போகலாமென்று வந்தேன்,” என்றார்.

“யாரு, சந்துருவா? அவருக்கு என்ன?” என்றேன்.

“அவர் இளைஞராகவும் தொழிலுக்குப் புதியவராகவும் இருப்பதனால் அடிக்கடி கோபப்படுகிறார் ஐயா. பையன்களை அடிக்கடி கடுமையாகத் தண்டிக்கிறார். சிலபேரை அவர் அடித்த அடியில் தழும்புகூட ஏற்பட்டு இருப்பதுபோல தெரிகிறது. அவர் எங்களிடம் அதிகம் பேசுவதில்லை. அதனால், நாங்களும் அவருக்கு எதுவும் சொல்ல முடியவில்லை. நீங்களாவது…'' என இழுத்தார் கணேசன்.

புதிய ஆசிரியர் சந்துரு மீது இவ்வாறான குறைகளை நான் கேள்விப்படுவது இது முதன்முறையல்ல.

நான் சந்துருவிடம் பேசுவதாகக் கூறி கணேசனை அனுப்பி வைத்தேன். பள்ளி ஓய்வு நேரத்தின் போது ஆசிரியர் அறைக்குச் சென்றேன். சந்துரு தனியாகத்தான் இருந்தார்.

“என்ன சந்துரு, மாணவர்கள் உங்கள் பொறுமையை அதிகம் சோதிக்கிறார்கள் போலிருக்கு…,” என்றேன்.

“ஆமாம் ஐயா. பிள்ளகளா இவர்கள்? மரக்கட்டைகள். நாலு வருடம் ஒரு பள்ளிக்கூடத்தில் கழித்த பிறகு கூட தன்னுடைய சொந்தப் பெயரையே எழுதத் தெரியாத இவர்களை வேறு என்னவென்று சொல்வது? என்ன கேள்வி கேட்டாலும் எழுந்து திருதிருனு விழிக்கிறார்கள். அடித்தால்கூட அழத்தெரியவில்லை. செத்த பிணங்கள் மாதிரி இருக்கிறார்கள். இவங்களுக்கு எப்படி ஐயா பாடம் சொல்லிக் கொடுப்பது? நாம் அத்தனை பேரும் நம்முடைய நேரத்தை வீணாக்கிக் கொண்டு இருக்கிறோமோ என்று நினைக்கிறேன்…” என்றார்.

“உண்மைதான். நீங்கள் சொல்வது போல இவர்களெல்லாம் பிணங்கள்தான். ஆனால் இந்தப் பிணங்கள் அழுகிப் போகாமல் பாதுகாக்கும் பொறுப்பு உங்களுக்கு உண்டு,” என்று வருத்தத்தோடு கூறிவிட்டு அங்கிருந்து அகன்றேன்.

ஒரு மாதம் கழிந்தது. இப்பொழுதெல்லாம் ஆசிரியர் சந்துரு பற்றிய புகார் ஒன்றும் எனக்கு வருவதில்லை. அவருடைய போக்கு எனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை.

அன்று மாலை விளையாட்டுப் பயிற்சிகளை முடித்து விட்டு சந்துரு ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தார்.

“என்ன சந்துரு? எப்படியிருக்கிறார்கள் உங்கள் மாணவர்கள்,” என்று நான் கேட்டு முடிக்கும் முன்பே, “நான் இப்பொழுதெல்லாம் மாணவர்களை கையால் தொடுவதே இல்லை ஐயா,” என்றார்.

“இப்பதிலால் எனக்கு எந்த மகிழ்ச்சியும் இல்லை சந்துரு. மாணவர்களை நீங்கள் கையால் தொட்டபோது மனத்தாலும் தொட்டிருந்தீர்கள். அவர்கள் நன்கு படிக்க வேண்டும். வாழ்க்கையில் நன்நிலைக்கு வர வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு இருந்தது. ஆனால், எப்பொழுது **கையால் தொடுவதை விட்டீர்களோ** அப்பொழுதே மனத்தாலேயும் தொடுவதில்லை என்று நினைக்கிறேன். உங்க போக்கில் ஆத்திரத்தைவிட அக்கறையின்மைதான் அதிகம் இருக்கு,” என்றேன்.

“நான் நம்ம மாணவர்களுக்கு நிறைய செய்ய வேண்டும் என்கிற எண்ணத்தில வந்தேன் ஐயா. சில அறிவாளிகளையும், சில தலைவர்களையும், சில விஞ்ஞானிகளையும் உருவாக்கப் போகிறோம் என்று கனவு கண்டேன். ஆனால், இவர்களுக்கு அறிவு புகட்டுவது மணலை வைத்து வீடு கட்டுவதைப் போலிருக்கின்றது. நான் கட்ட கட்ட அந்த வீடு சரிந்து சரிந்து விழுகின்றது. ஏமாற்றத்தினால்தான் மாணவர்களை முதலில் அடித்தேன். ஆனால், அதுவும் பயன் தரவில்லை. நான் என் முயற்சியைக் கைவிட்டுவிட்டேன். இப்போது நான் பாட்டுக்கு என் வேலையைச் செய்கிறேன,” என்றார் தரையைப் பார்த்தவாறு.

“சந்துரு, நீங்கள் பயிற்சி பெற்ற ஆசிரியராக இருக்கலாம். ஆனால், உங்கள் உண்மையான பயிற்சி இனிமேல்தான் தொடங்கப் போகின்றது. இந்த மாணவர்களுக்கு உடல் வலு இருக்கின்றது. ஆனால் அறிவு வலு இல்லை. அதற்குக் காரணம் வறுமை, அறியாமை. அதனால இவங்க மேல் கோபத்தையும் எரிச்சலையும் காட்டுவதைவிட அன்பையும் அனுதாபத்தையும் காட்டுங்கள். அவர்கள் அறிவை வளர்ப்பதற்கு நம்மால முடிந்ததை நேர்மையுடனும் உறுதியுடனும் செய்வோம். அப்படிச் செய்தால் நமக்குப் பிறகு வரும் ஆசிரியர்களாவது அறிவுச் செறிவுள்ள மாணவர்களை இந்நாட்டில் பார்ப்பார்கள்…,” நான் முடிக்கும் போது சந்துரு ஆச்சரியத்தோடு என்னைப் பார்த்துக் கொண்டு நின்றார்.

-ரெ.கார்த்திகேசு
பிள்ளையார் பந்து (எடுத்தாளப்பட்டது)

*[Lihat halaman sebelah*

11 ஆசிரியர் சந்துரு மாணவர்களை மரக்கட்டைகள் என்றும் பிணங்கள் என்றும் குறிப்பிட்டார். ஏன்? [3 புள்ளி]

12 (அ) இச்சிறுகதையில் வரும் ஆசிரியர் சந்துருவின் பண்புநலன்கள் **இரண்டனை** அவை வெளிப்படும் சம்பவத்தோடு குறிப்பிடுக. [4 புள்ளி]

(ஆ) ஆசிரியர் கணேசன் தலைமையாசிரியரிடம் சந்துருவைப் பற்றி முறையிட்டதற்குக் காரணம் என்னவாக இருக்கும்? [3 புள்ளி]

13 எப்பொழுது **கையால் தொடுவதை விட்டீர்களோ** என்னும் தொடர் உணர்த்தும் சூழலுக்கு ஏற்ற பொருள் யாது? [2 புள்ளி]

14 (அ) ஆசிரியர் சந்துருவின் இடத்தில் நீ இருந்தால் மாணவர்களின் மேம்பாட்டிற்காக நீ எடுக்கக்கூடிய **இரண்டு** நடவடிக்கைகளை எழுதுக. [4 புள்ளி]

(ஆ) இச்சிறுகதை உணர்த்தும் **படிப்பினைகளை** எழுதுக. [4 புள்ளி]

15 கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, உமது **சொந்தமொழிநடையில் விளக்கம்** எழுதுக.

நுனிப்புல்லை மேய்தல்போல் நூலை மேய்ந்தால்
நுண்ணறிவு வராது; மாட்டைப் போல
திணித்தவற்றை அசைபோட்டே அரைத்தல் போன்று
திருத்தமுறப் படித்தால்தான் நினைவில் நிற்கும்
பனிமுத்து பரிதிமுன்னே அழிதல்போல
பகுத்துணராப் படிப்புன்னில் பதிந்தி டாது
நனிமுத்தாய் ஒளிவீச நாளும் நாளும்
நல்ல நூல்கள் ஆழமாகப் படிக்க வேண்டும்
- கவிஞர் கருமலைத் தமிழாழன்

[10 புள்ளி]

*[Lihat halaman sebelah*

## பிரிவு இ: செய்யுளும் மொழியணியும்

[20 புள்ளி]

**கேள்விகள் 16 முதல் 19 வரை**

16 கொடுக்கப்பட்டுள்ள **உவமைத்தொடரைப்** பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

**சிறகு இழந்த பறவை போல**

[2 புள்ளி]

17 கொடுக்கப்பட்டுள்ள **பொருளுக்கு** ஏற்ற திருக்குறளை எழுதுக.

**ஊக்கம் உடையவர்கள்தாம் செல்வம் உடையவர்களாகக் கருதப்படுவார்கள். ஊக்கம் இல்லாதவர்கள் எவ்வகைச் செல்வங்களைக் கொண்டிருந்தாலும் உடையவர்களாக ஆகமாட்டார்கள்**

[2 புள்ளி]

18 கோடிடப்பட்டுள்ள **செய்யுளடிகளின்** பொருளை எழுதுக.

என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையில் காதலன் தனக்கு
நடுங்குதுயர் எய்தி, நாப்புலர வாடித்,
தந்துயர் காணாத் தகைசால் பூங்கொடி;
இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்
**<u>கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது</u>**
**<u>பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால் !</u>**

*சிலப்பதிகாரம்*

[4 புள்ளி]

19 *கீழ்க்காணும் பனுவலில் அடைப்புகளுக்குள் இருக்கும் இடங்களுக்குப்* **பொருத்தமான** *மொழியணிகளை எழுதுக.* **பத்தியை மீண்டும் எழுத வேண்டாம்.**

மாஸ்கோ, ஜுன் 25- உலகக் கிண்ண காற்பந்து போட்டியில் இதுவரை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ள பெல்ஜியக் காற்பந்து குழு பிரிவு ஜி-யில் பலம் வாய்ந்த இங்கிலாந்து, துனிசியா, பனாமா போன்ற குழுக்களைப் பின்தள்ளி முதலிடம் பெற்றது. இது, பலம் வாய்ந்த இங்கிலாந்து குழு முதலிடம் பெறும் என்ற பலரது கருத்துக் கணிப்பைப் பொய்யாக்கியது. இம்முறை எப்படியாவது ஜி-பிரிவில் முதலிடம் பெறுவோம் என்ற நம்பிக்கையில் களம் இறங்கிய பெல்ஜியக் குழு தன் மனத்தையும் கவனத்தையும் விளையாட்டில் செலுத்தி, அதற்கான செயலில் முனைப்புக் காட்டியதால் நினைத்தது போலவே அப்பிரிவில் முதலிடம் பெற்றது. (**I-பழமொழி**)

இந்நாள் வரை வெளியில் அதிகமாகத் தெரியாத குழுவாகவே பெல்ஜியக் காற்பந்து குழு இருந்து வந்தது. ஆனால் இவ்வாண்டு ஜி-பிரிவில் வென்றதன் மூலம் அக்குழுவின் திறமை வெளியுலகிற்குத் தெரிய வந்துள்ளது (**II-உவமைத்தொடர்**). காற்பந்து விளையாட்டின் நுணுக்கங்களை கைவரப் பெற்றதே இக்குழுவின் வெற்றிக்கு முக்கியக் காரணமாகக் கருதப்படுகிறது (**III-மரபுத்தொடர்**)

பெல்ஜியக் குழுவின் பயிற்றுநர் ரோபெர்தோ மார்தினெஸ் மிகவும் திறமைமிக்கவர். எந்தப் பகுதியில் எந்த விளையாட்டாளரை நிறுத்த வேண்டுமென்று அறிந்து, அவர்கள் அந்தப் பகுதியில் விளையாட வைத்ததே இக்குழுவின் வெற்றிக்கு முக்கியக் காரணம் எனலாம். (**IV-திருக்குறள்**)

[12 புள்ளி]

## பிரிவு ஈ : இலக்கணம்

[20 புள்ளி]

**கேள்விகள் 20 முதல் 22 வரை**

20 கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**(அ) பிரித்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| i) | பெருமை | + | அருள் |
| ii) | பாதி | + | பணம் |

[2 புள்ளி]

**(ஆ)** **திசைச்சொல்** என்றால் என்ன? [2புள்ளி]

**(இ)** பெயரெச்சம், வினையெச்சம் இவ்விரண்டுக்கும் **இரண்டு** எடுத்துக்காட்டுகள் எழுதுக.

[4 புள்ளி]

21 கீழ்க்காண்பனவற்றுள் **குன்றாவினை** வாக்கியத்திற்கு வட்டமிடு.

அ பெருந்தலைவர் காமராசர் நாட்டுநலத்தையும் ஊர்நலத்தையும் போற்றிக் காத்த பெருமகனார்.

ஆ அருள்மதி வேகமாக ஓடும்போது காலிடறி கீழே விழுந்து வலியால் துடித்தாள்.

[2 புள்ளி]

22 கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை மட்டும்** அடையாளங்கண்டு அவற்றைச் **சரிப்படுத்தி எழுதுக**.
[பத்தியை மீண்டும் எழுத வேண்டாம்; நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

இந்நாட்டில் தமிழ்மொழியும் தமிழ்ப்பண்பாடும் நிலைப்பதோடு தலைத்தோங்க வேண்டுமெனில் தமிழ்ப்பள்ளிகள் சிறந்து விளங்க வேண்டும். இப்பொழுதும் தமிழ்ப்பள்ளிகள் அதைத்தான் செய்து வருகின்றது என்றால் மிகையாகாது. தமிழ்ப்பள்ளி என்பது தமிழ்ச் சமுகத்தின் உரிமைப் பொருளாகும். அந்த உரிமையை பறிக்க யாரும் முயலக்கூடாது. அந்த உன்னதப் பொருளை வளமடையச் செய்து பேனிக்காப்பது சமுகத்தின் கையிலேயே உள்ளது. நாம் இனமான உணர்வுமிக்கவர்களாத் திகழ வேண்டும். எதிர்காலத்தில் தோட்டப்புரப் பள்ளிகள் எண்ணிக்கையில் குறைந்தாலும் நகர்ப்புறத் தமிழ்ப்பள்ளிகள், பல்லாயிரம் மாணவர் பயிலும் பெரும் பள்ளிகளாக உருவாக வேண்டும்.

(10 புள்ளி)

**KERTAS SOALAN TAMAT**